# EN KANMALAI NEERAE

என் கன்மலை நீரே உம் கண்ணின் மணி நானே

காத்திடுவீரே என்றென்றும் நீரே

உம் கண்ணை வைத்து ஆலோசனை சொல்லுபவர் நீரே
கோணல்களை செவ்வையாக மாற்றுபவர் நீரே

ஆடிடுவேன் பாடிடுவேன்

அல்லேலூயா சொல்லி போற்றிடுவேன்

நெருக்கத்திலே இருந்த என்னை

கூப்பிட்ட நேரத்தில் பதில் கொடுத்தீர்

நான் உம்மைவிட்டு சென்றாலும் என்னை விடமாட்டீர்

உந்தன் உள்ளங்கையில் வைத்து என்னை பாதுகாப்பீர்.....
ஆடிடுவேன்...

புழுதியிலே இருந்த என்னை

புகலிடம் கொடுத்து உயர்த்தினீரே

தள்ளப்பட்ட என்னை நீர் தலையாக்கினீரே

உந்தன் பேரைத் தந்து உம் பிள்ளையாக்கினீரே.....
ஆடிடுவேன்...